**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 10-06-2022**

**வெள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-06-10 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-06-11 | 2022-06-12 | 2022-06-13 | 2022-06-14 | 2022-06-15 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 2.0 | 4.0 | 7.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 39.0 | 39.0 | 38.0 | 38.0 | 38.0 |
| டிமின் (° C) | 27.0 | 27.0 | 27.0 | 27.0 | 27.0 |
| RH I (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| RH II (%) | 45 | 45 | 45 | 45 | 45 |
| காற்றின் வேகம் (கிமீ) | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 230 | 230 | 230 | 250 | 250 |
| மேகக்கணி (ஆக்டா) | 3 | 3 | 5 | 2 | 2 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜுன் 11,12,13 தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 38-39 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 10 கி.மீ வரை தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 15.06.2022 முதல் 21.06.2022 வரை இயல்பைவிட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது.

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

வரும் நாட்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே பயிர்கள் பாதிப்படையாமல் இருக்க வடிகால்வசதி அமைக்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| அரிசி | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் நடவு செய்த நெல் வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ளவும் . நெல் நடவுவயலில் களைகளைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பியூட்டாக்ளோர் களைக்கொல்லி 2.5 லிட்டர் + 25 கிலோ மணலுடன் கலந்து நட்ட மூன்றாம் நாள் இடவும். |
| நிலக்கடலை | மண் பரிசோதனை செய்யாவிட்டால் இறவைப்பயிர் நிலத்திற்கு 25 :50 :75 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களுடன் 60 கிலோ கந்தகக் கழிவை இடவேண்டும்.தழைச்சத்து மற்றும் மணிச்சத்தை மூன்று பிரிவுகளாக பிரித்து அடிப்படையாக 50% + விதைத்த 20-ம் நாளில் 25 % மற்றும் விதைத்த 45-ம் நாளில் 25 % அளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பசுக்களை மழைக்காலங்களில் கொட்டகையினுள்ளும் மற்றும் மேட்டுப்பாங்கான இடங்களிலும் கட்டி வைக்க வேண்டும். மழை,இடி,மின்னல் நேரத்தில் மரத்தடியில் கட்டி வைக்க வேண்டாம். சினையில்லா பசுக்கள் கிடேரிகள் கன்றுகளுக்கு (10 மி.கி/1கிலோ உடல் எடை) குடற்புழு நீக்க மருந்து ஆக்சிகுளோக்ஸனைடு திரவம் உடல் எடைக்கு ஏற்றவாறு தரவும். கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடவும். |
| வெள்ளாடு | குடற்புழு நீக்க மருந்து ஆக்சிகுளோஸனைடு மருந்து 15 மி.கிராம் ஒரு கிலோ உடல் எடை வீதம் குடிக்க கொடுக்கவும். மழையின் போது ஆடுகளை கொட்டகையினுள்ளும் மற்றும் மேடான பகுதியிலும் கட்டி வைக்கவும். ஆடுகளுக்கு பி பி ஆர் தடுப்பூசி போடவும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | மழைநீரால் தீவனம் வீணாகாமல் பாதுகாக்கவும். கோழிகளின் எச்சம் சிவப்பு நிறமாக உள்ளதா என கவனிக்கவும். ரத்தக்கழிச்சல் நோய் இருப்பின் ஆம்ப்ரோலியம் மருந்து (150மி.லி/100லிட்டர்) குடிநீரில் கலந்து கொடுக்கவும். |